# வளலாயில் புலிகள் தாக்குதல்; 5 இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)
வளலாயில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய நான்குநிமிட தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் பலியாகினர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.
நேற்றுக்காலை 7 மணியளவில் வளலாயிலுள்ள இராணுவ காவலரண் ஒன்றிலிருந்து
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 06 இதழ் 34
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20—01—1992

## புலிகள் பலம் இழக்கவில்லை

### அன்ரன் பாலசிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)
"விடுதலைப்புலிகள் சமாதானத்துக்கான சமிக்ஞையை காட்டும்போது, புலிகள் பலமிழந்துவிட்டார்கள் என எதிரிகள் நினைத்துவிட்டார்கள். இப்படியானநினைவுடன் பாரிய ராணுவ நடவடிக்கைக்கான முஸ்தீபை மேற்கொள்ள இலங்கை அரசு முயற்சிக்கிறது. அப்படியான ராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள புலிகள் தயாராகவும் பலமாகவும் இருக்கின்றோம்."
இவ்வாறு தமிழீழம்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து அச்சுவேலி, தம்பாலை, கதிரிப்பாய், இடைக்காடுப் பகுதிகளிலுள்ள குடிமனைகளை நோக்கி, நேற்று பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.
படையினர் 20க்கு மேற்
(4ம் பக்கம் பார்க்க)

## முன்னர் விருப்பம் தெரிவித்த

# அகதிகள் பலர் இலங்கை திரும்ப

# இந்திய அதிகாரிகளிடம் மறுப்பு!

(சென்னை)
இலங்கை திரும்ப முன்னர் விருப்பம் தெரிவித்திருந்த தமிழ்நாட்டில் தங்கியுள்ள அகதிகள் பலர் தற்போது இலங்கை திரும்ப இந்திய அதிகாரிகளிடம் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.
இன்று சென்னையிலிருந்து இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்த அகதிகள் நாடுதிரும்புவர் என அறிவித்தாலும் கூட, வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையே போர் நடந்து கொண்டிருப்பதாலும், தாம்
[4ம் பக்கம் பார்க்க]

## 750 அகதிகள் இன்று புறப்பாடு

(சென்னை)
இலங்கைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்திருக்கும் இலங்கை அகதிகளில் முதல் தொகுதியான 750 பேர் இன்று காலை சென்னைத் துறைமுகத்திலிருந்து திருகோணமலைக்கு
(4-ம் பக்கம் பார்க்க)

### தாயகம் திரும்பும்

## அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம்

(கொழும்பு)
இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளில் அரசாங்க ஊழியர்களுக்கு தலா ஆயிரம் ரூபா முற்பணமாக
4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பாதிக்கப்படுவதை அரசு அனுமதிக்காது-ஜனாதிபதி

(களுத்துறை)
"வடக்கு கிழக்கு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண சகல முயற்சிகளும் எடுக்கப்படும் அதேவேளை இந்த இரு மாகாணங்களிலும் வாழும் அப்பாவி மக்கள் எவராலும் துன்புறுத்தப் படாதிருப்பதை உறுதிப்படுத்த அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்"
இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.
களுத்துறையில் இடம்பெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகை
(4-ம் பக்கம் பார்க்க)

## கனேடிய மனித உரிமைகள் குழு மட்டுநகருக்கு விஜயம்

(லண்டன்)
கனடாவைச் சேர்ந்த மனித உரிமைகள் குழுவின் பிரதிநிதிகள் அடுத்த வாரமளவில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள்.
இதேவேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச படையினராலும், ஊர்காவல் படையினராலும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று
(4ம் பக்கம் பார்க்க)

## விசேட பொலிஸ் நடவடிக்கை பிரிவிடமிருந்து ஆயுதங்கள் வாபஸ்

(கொழும்பு)
விசேட பொலிஸ் நடவடிக்கை பிரிவினிடமிருந்து ஆயுதங்கள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
இந்தப் பணியகத்தின் நடவடிக்கைகள் குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், மனித உரிமை அமைப்புகளும், எதிர்க்கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளதையடுத்தே மேற்படி பிரிவிடமிருந்து ஆயுதங்கள் வாபஸ் பெறப்பட்டன.
[அ]

## இனவெறி அராஜகசக்திகளே சமாதானத்தைக் குழப்புகின்றன

### இ. தொ. கா. கண்டனம்

(கொழும்பு)
இனவெறி அராஜக சக்திகள் மீண்டும் தலை தூக்கியுள்ளன என்று இலங்கை இ. தொ. கா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இந்த அராஜக சக்திகளே இனப்பிரச்னை தீர்வு முயற்சிகளை குழப்புகின்றன என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.
புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்த அமைச்சர் தொண்டமான் எடுத்த முயற்சிகள் பற்றிய பலரின் விமர்சனங்கள் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே தொழிலாளர் காங்கிரஸ் மேற்கண்டவாறு தெரிவித்தன.
(4-ம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து ஊழியர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களில் பலர் மன்னார் சாலை, வவுனியாசாலை ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
(மா)

## தொண்டமான் தமிழகம் பயணம்

(கொழும்பு)
கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் இரவு தமிழகம் பயணமானார்.
22ம் திகதிவரை தமிழகத்தில் தங்கியிருக்கும் அமைச்சர் தொண்டமான் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு குறித்து தமிழக அரசியல் தலைவர்களுடன் விவாதிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
[அ]

## தமிழக அணு உற்பத்தி திட்டம் கைவிடப்பட்டது

(புதுடில்லி)
சோவியத்யூனியன் உதவியுடன் தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருந்த அணுசக்தி உற்பத்தி நிலைய திட்டத்தை இந்தியா கைவிட்டுள்ளது.
முன்னாள் சோவியத் யூனியனுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி பிர
(4-ம் பக்கம் பார்க்க)

## Jam போத்தல்கள் தேவை

ஜாம் [Jam] புரோடினேக்ஸ், விவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

**Taste Line Industries(Pvt)Ltd**
14, Seenier Lane, Jaffna,

குறிப்பு: Jam போத்தல்கள் தொடர்ச்சியாக கமிஷன் அடிப்படையில் விநியோகம் செய்யக்கூடியவர்கள் தேவை.

(ஏ 1840)



## மொழிபெயர்ப்பாளர் தேவை

தொழில் நுட்பவியல் சார்ந்த விஷயங்கள் தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றலுள்ளோர் தேவை.
உடன் தொடர்புகொள்க

அம்பலவாணர்,
ஆடியபாதம் வீதி,
[கொக்குவில் வீதி]
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி,

[இ-5880]


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் S. அம்பிகைபாகன்
[மல்லாகம்]

பரம்பொருளையும் எங்களுக்குத் தெய்வமாக இருந்த உங்களையும் நினைத்து வண்ணம் வணங்குகிறோம்; உங்கள் படத்திலும் எங்கள் உள்ளத்திலும் நினைந்து ஆறுதல் கொள்கின்றோம்; தங்கள் ஆத்மா சிவபுரத்தில் சேர்ந்து முத்தியடைய எங்கள் குலதெய்வத்தைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சிவம்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மணிமனை"
மல்லாகம்.

(ஏ 1872)

## சனசமூகநிலைய நன்கொடை
(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட சனசமூகநிலையங்களில் 7 சனசமூகநிலையத்தினரே 1991ம் ஆண்டுக்கான நன்கொடைபெறும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஏனைய சனசமூக நிலையத்தினரும் இவ்விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பெப்ரவரி மாத இறுதிக்குள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இந்நன்கொடையைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார்.

## இராசி பலன்

20. 01. 1992
திங்கட்கிழமை
(தமிழுக்கு தை 06)

பிரதமை பி. இ. 1-35வரை பூசம் மு. இ. 10-58 வரை, சித்தயோகம், தைப்பூசம், இராகுகாலம்காலம்8-05முதல் 9-05 வரை, சுபநேரம் 12-35 முதல் 1-05 வரை.

மேடம்: நம்பிக்கையின்மை, தனவிரயம், உறவினர் குறை.

இடபம்: கீர்த்தி, மனோதைரியம், தொழில் மூலமான லாபம்.

மிதுனம்: காரியத்தடை, மனச்சங்கடம், அகால போஜனம்.

கடகம்: வெகுமானம், புத்திரர் பெருமை, மனமகிழ்ச்சி.

சிம்மம்: கீழ்ப்படிதல், சோம்பல், காரிய தடை.

கன்னி: நண்பர் உதவி, போஜன சௌகரியம், குடும்ப நன்மை.

துலாம்: பெரியோர் ஆசி, பந்து சந்தோசம், வெற்றி.

விருச்சிகம்: நிர்ப்பந்தம், பிரயாசை, தேசாந்திர வாசம்.

தனுசு: சிந்தைக் கலக்கம், சரீரபீடை, பொருள் நஷ்டம்.

மகரம்: தனலாபம், வித்தையான கற்பனை, தொழிலுறவு.

கும்பம்: தர்ம சிந்தனை, தொழில் சிறப்பு, பயணம்.

மீனம்: அலைப்பெயர், மனக்கவலை.

— ஜோதிடர்


உங்கள் அடுத்த உணவு வேளைக்கு விஜயம் செய்யுங்கள்

## ஜெசித்தாரா
உள்ளூர் உணவகம்

19/3, கொழும்புத்துறை சாலை,
சுண்டிக்குளி.

(ஏ 5865)


யாழ்ப்பாண மாநகரசபை

## பொதுமக்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

யாழ். நகர மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சனைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் சுகாதார சீர்கேடுகளை விளைவிப்போர்மீது மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் ரூபா 500/-க்கு மேற்படாத தண்டம் விதிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

மாநகரசபையின் சுகாதார சேவை சிறப்புற நகர மக்கள் புரிந்துணர்வுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

01. கழிவு நீரோடும் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைப் போடுதல் அல்லது வாய்க்கால்களை மூடி கட்டிடங்களை நிர்மாணித்தல்.
02. வீதிகளில் குப்பைகளைப் போடுதல்
03. வெற்றுக் காணிகளுக்குள் அல்லது வளவுகளுக்குள் செடிகள், பற்றைகளை வளரவிடுதல், நீர் தேங்கி நிற்கும் வகையில் பாவனைக்குதவாத பழைய பொருட்களைக் குவித்து வைத்திருத்தல், குண்டு குழிகளை மூடாது வைத்திருத்தல்.
04. நாய், ஆடு, மாடு, பன்றி போன்றவற்றை கட்டாக்காலிகளாக அலையவிடுதல். (பிடிக்கப்படும் கட்டாக்காலிகளைப் பராமரிக்கும் செலவும் தண்டத்துடன் சேர்த்து அறவிடப்படும்)

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-01-92.

(ஏ-1854)

## 45-ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் கந்தவனம் இராசதுரை
[முன்னாள் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாக (புத்தளம்) இருந்தவரும், ராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்]

| | |
|---|---|
| தொண்டு தொட்டு வாழ்ந்து பிறப்பு: 15 04 1925 | குண்டுபட்டு வீழ்ந்த இறப்பு: 07-12-1991 |

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமதாய்
நேசத்தின் நிறைவிடமாய் நெஞ்சத் தொளிவிளக்காய்
அன்புக் களஞ்சியமாய் ஆதரவின் நிலைக்களமாய்
இன்ப வளநதியாய் இதயக் கடர்மதியாய்
என்றும் நிலவிய நீங்கள் எங்குபோய் மறைந்தாலும்
என்றுமுங்கள் நினைவுடன் இருந்திருப் போமினிமேல்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(இ 5884)


ஓம் ஜெய் ஸ்ரீ சாயிராம்

## ஸ்ரீ காந்தா புத்தகசாலை

(ராஜா தியேட்டர் அருகாமை — ஸ்ரீ லங்கா அச்சக லேன்)
336/51, கே. கே. எஸ். வீதியில்
இன்று [20-01-1992] திங்கட்கிழமை
பகல் 9-30 மணியளவில் வரும் சுபநேரத்தில்
மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறதென்பதை
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.

இப்படிக்கு
நிர்வாகம்.

(ஏ-1878)

